සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

**51 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.


**பகுதி II**
- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **ஒரு** உப பகுதியிலிருந்து **ஒரு** வினா வீதம் தெரிவுசெய்து, **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I**, பகுதி **II** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி I

- **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையை **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


A


B


C


D


E

**1.** **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இசுறுமுனியவில் அமைந்துள்ள கல்லில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கலினால்,
(1) தீயிற்கு அதிபதியான அக்கினிபகவான் எடுத்துக்காட்டப்படுகிறார்.
(2) நீருக்கு அதிபதியான வர்ணபகவான் எடுத்துக்காட்டப்படுகிறார்.
(3) சூரிய வம்சத்தவனான அர்ச்சுனன் நினைவூட்டப்படுகிறான்.
(4) அக்கினிபகவானும் வர்ணபகவானும் சித்திரிக்கப்படுகின்றனர்.
(5) சித்தார்த்தன் நினைவூட்டப்படுவதுடன் 'கந்தக' எனும் குதிரையும் நினைவூட்டப்படுகின்றது. (.........)

**2.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கல்,
(1) கம்பளை கால பழமையான அம்பலம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.
(2) நாட்டியப் பெண்மணியும் தவில் வாசிப்பவரும் காட்டப்பட்டுள்ள பனாவிட்டிய அம்பலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற செதுக்கலாகும்.
(3) தவில் வாசிப்பவரையும் நடனமாடுமொரு பெண்ணையும் எடுத்துக்காட்டும் எம்பக்க அம்பலத்தின் செதுக்கலாகும்.
(4) எம்பக்க தேவாலயத்தின் நுழைவாயிலிலிருந்து எடுக்கப்பட்ட நடனமாடும் பெண்ணினதும் தவில் வாசிப்பவரினதும் செதுக்கலாகும்.
(5) மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் எம்பக்க தேவாலயத்திலுள்ள செதுக்கலாகும். (.........)

**3.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் செதுக்கல் கிடைக்கப்பெற்றது,
(1) பொலன்னறுவை ஹெட்டதாகேயிலிருந்து ஆகும்.
(2) மிகிந்தலை கண்டக சைத்தியவிலிருந்து ஆகும்.
(3) பொலன்னறுவை அட்டதாகேயிலிருந்து ஆகும்.
(4) பொலன்னறுவை நிஸ்ஸங்கமல்ல மன்னனின் அரச மாளிகையிலிருந்து ஆகும்.
(5) அனுராதபுர மிரிசவெட்டிய நுழைவாயிலிலிருந்து ஆகும். (.........)

tamilguru.lk

**4.** **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மல்லவபுர செதுக்கலின் ஒரு பகுதியினால் வெளிப்படுத்தப்படுவது, சிவபெருமான்
(1) தனது பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றமை (2) அர்ச்சுனனின் தவநிலையை ஆராய்கின்றமை
(3) பகீரத முனிவரைக் கடிந்துரைக்கின்றமை (4) ஆகாயகங்கையை உருவாக்க முனைகின்றமை
(5) பகீரத முனிவரால் ஆகாயகங்கையை உருவாக்கித் தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றமை (.........)

[பக். 2 ஐப் பார்க்க

**5.** **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள உரோமாபுரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ட்ரஜன் நினைவுத்தூண்,
(1) அதிகளவான சம்பவங்களின் தொகுதியைக் காணக்கூடியவொன்றாகும்.
(2) டேசியர்கள் தமது யுத்த முறைகளைச் செதுக்குவதற்காக நிர்மாணித்ததாகும்.
(3) அப்பலோடோரஸ் என்ற கட்டடக்கலைஞரால் கட்டப்பட்டு செதுக்கப்பட்டதாகும்.
(4) உரோமர்களின் வாழ்வியலும் புராணக் கதைகளும் கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை பரவலடையும் விதத்தில் செதுக்கப்பட்டுள்ளதாகும்.
(5) மார்க்கஸ் ஒருலியஸ் என்ற பேரரசனின் வாழ்க்கைக் குறிப்புகள் இங்கு சிறப்பமாக்கப்பட்டுள்ளதாகும். (.........)

- **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**6.** பிரகாசமான சிவப்பு நீர்வர்ணத்திற்கு வெள்ளை வர்ணத்தை சமமான அளவு கலந்தால் நடைபெறுவது,
(1) வர்ணத்தின் வெளிப்படையாகத் தெரியும் தன்மை உறுதிப்படுத்தப்படுதலாகும்.
(2) வர்ணத்தின் பலம் அதிகரித்தலாகும்.
(3) பூசுதல் மிக இலகுவாய் அமைதலாகும்.
(4) வேறொரு நிறத்திற்கு மாறுதலாகும்.
(5) வர்ணத்தின் ஒரு பளிச்சிடும் வகை உருவாகுதலாகும். (.........)

**7.** புடைவைகளுக்கு மூட்டற்ற வடிவங்களைப் பயன்படுத்தி பரவலடையும் அலங்காரமொன்றை நிர்மாணிக்கும்போது அதன் அலங்காரம் தொடர்பில் எந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் ?
(1) வர்ண அலங்காரத்திலாகும். (2) அச்சிடலின் இலகுதன்மையிலாகும்.
(3) வர்ணங்களின் கலவையிலாகும். (4) கோலம், அலங்காரத்தின் தன்மை என்பவற்றிலாகும்.
(5) வடிவங்களின் முறையான பொருத்தப்பாட்டிலாகும். (.........)

**8.** கருத்து வெளிப்பாட்டுச் சித்திர ஒழுங்கமைப்பின் மிக முக்கியமான அங்கம்,
(1) வெளிப்படுத்தப்படும் மனித உருவங்கள் இயற்கைத் தன்மையினதாக அமைதலாகும்.
(2) கருத்தும் பாவமும் வெளிப்படுதலாகும்.
(3) தளம் முழுமையாக நிறைந்து காணப்படும் விதத்தில் வெளிப்பாட்டின் கூறுகளைக் கையாளலாகும்.
(4) இயற்கையான தன்மை எடுத்துக்காட்டப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுதலாகும்.
(5) உயிர்த்துடிப்புடன் கூடிய ரேகையைக் கையாளலாகும். (.........)

**9.** மரபுரீதியான முகமூடிக் கைத்தொழிலில் கருடனின் உருவத்தைக் கொண்ட முகமூடிகள் அறியப்படுவது,
(1) கோல முகம் என்றாகும். (2) அரச முகம் என்றாகும்.
(3) இராட்சத முகம் என்றாகும். (4) உருத்திரிபுடைய முகம் என்றாகும்.
(5) புத்தாக்க முகம் என்றாகும். (.........)


**10.** கிறபிக் சித்திர ஆக்கங்களை மேற்கொள்ளும் ஒரு கலைஞர் மிகக் கவனம் செலுத்த வேண்டியது,
(1) பல்வகை எழுத்துகளை நிர்மாணிப்பதிலாகும்.
(2) தொடர்பாடல் தேவைகளுக்காக புத்தாக்கங்களை மேற்கொள்வதிலாகும்.
(3) பிரசாரப் பணிகளுக்கான சுவரொட்டிகளை நிர்மாணிப்பதிலாகும்.
(4) நூல்களின் மேலட்டைகள், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதிலாகும்.
(5) வர்த்தக ரீதியான உற்பத்திகளின் முகப்பு அடையாளங்களை (Labels) நிர்மாணிப்பதிலாகும். (.........)

- **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை** **F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் சிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.


F


G


H


I


J

**11.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலை,
(1) 8ஆம் நூற்றாண்டில் மகாயான பௌத்த எண்ணக்கருவுக்கமைய 'புதுருவகல' என்ற கற்பாறையில் செதுக்கப்பட்டதாகும்.
(2) புதுருவகல கற்குன்றில் செதுக்கப்பட்டுள்ள மகாயான சிலைகளுள் ஒன்றாகும்.
(3) சஸ்சேருவ கற்குன்றில் ஒரு பகுதி வெளிப்பட்டுத் தோன்றும் விதத்தில் செதுக்கப்பட்டதாகும்.
(4) புடைப்புருச் செதுக்கோவியமாகச் செதுக்கப்பட்ட அனுராதபுரத்திலுள்ள ஒரேயொரு புத்தர் சிலையாகும்.
(5) இலங்கையில் மகாயான பௌத்த எண்ணக்கருவுக்கமைய செதுக்கப்பட்டுள்ள சிலைகளுள் புத்தரை நாடும் ஒருவரின் மிகப் பெரிய சிலையாகும். (.........)

[பக். 3 ஐப் பார்க்க

More Past Papers at
tamilguru.lk

**12.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பரணவிதான அவர்களின் சிலை வைக்கப்பட்டுள்ளது,
(1) சிகிரியாவின் அரும்பொருள் காட்சியகத்திலாகும்.
(2) தேசிய அரும்பொருள் காட்சியகத்திலாகும்.
(3) தேசிய கலாபவனத்திலாகும்.
(4) தொல்பொருள் திணைக்களத்திலாகும்.
(5) அழகியல் பல்கலைக்கழகத்திலாகும். (.........)

**13.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) கல்லிற் செதுக்கப்பட்ட எகிப்திய பாரா மன்னனின் சிலையாகும்.
(2) ஆரம்ப காலத்தில் கிரேக்கர்களால் பழமையான எகிப்திய சிலையைப் போலச் செய்யப்பட்டதொன்றாகும்.
(3) அபுசிம்பல் தேவாலயத்திலிருந்து வெட்டியகற்றப்பட்ட ரமேசஸ் வடிவங்களில் ஒன்றாகும்.
(4) பழமையான எகிப்திய மரபுரீதியான இயல்புகளைக் காட்டும் காப்ரே பாராக்களின் சிலையாகும்.
(5) அமர்னா தேவாலயம் நிர்மாணிக்கப்பட்ட காலத்தில் இயற்கையாக நிர்மாணிக்கப்பட்ட அக்னேடன் அரசனின் சிலையாகும். (.........)

**14.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) மதுரா சிலைகளில் அரச தன்மையை வெளிப்படுத்தும் ஒரேயொரு சிலையாகும்.
(2) மதுரா கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட கனிஷ்கன் என்ற அரசனின் சிலையாகும்.
(3) எளிமையான கேத்திரகணித வடிவங்களைப் பயன்படுத்தி மதுரா கலைஞர்களால் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(4) காந்தார தேசக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்ட தமது தலைவரான கனிஷ்கனின் சிலையாகும்.
(5) புத்தர் சிலை நிர்மாணிப்பைப் போன்று அரச பரம்பரையைச் சார்ந்தவர்களைச் செதுக்குவதற்கான காந்தார தேசக் கலைஞர்களின் முயற்சியாகும். (.........)

**15.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) தாயும் பிள்ளையும் சித்திரிக்கப்படும் அருபவாத கலை நிர்மாணிப்பாகும்.
(2) ஹென்றிமூவரின் கலை நிர்மாணிப்புகளிடையே தாயும் பிள்ளையும் சித்திரிக்கப்படும் நிர்மாணிப்பாகும்.
(3) மூட்டற்ற வடிவங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பூங்கா சிலையாகும்.
(4) ஒகஸ்தே ரோடீனால் நிர்மாணிக்கப்பட்ட தாயும் மகளும் சித்திரிக்கப்படும் சிலையாகும்.
(5) அடிப்படை வடிவங்களைப் பயன்படுத்தி சிறுவர் பூங்காவொன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிலையாகும். (.........)

- **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.

**16.** சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு தாய்த்தெய்வ உருவங்கள்
(1) பல்வேறு கற்பாறைகளைப் பயன்படுத்திச் செதுக்கப்பட்டுள்ளன.
(2) வெண்கலத்தைப் பயன்படுத்தி வார்ப்புச் செய்யப்பட்ட நிர்மாணிப்புகளாகும்.
(3) களிமண்ணினால் செய்யப்பட்டு, சுடப்பட்ட டெரகொட்டா நிர்மாணிப்பாகும்.
(4) பகுதி பகுதியாக நிர்மாணிக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டவையாகும்.
(5) மூட்டற்ற வடிவங்களாகச் செதுக்கப்பட்ட சிறிய சிலைகளாகும். (.........)

**17.** ஒரேயொரு பிற்பட்ட மனப்பதிவுவாதக் கலைஞரின் நிர்மாணிப்புகள்,
(1) உருளைக்கிழங்கு உண்பவர்கள், மஞ்சள் நிறத்திலான இயேசு என்பனவாகும்.
(2) சைப்பிரஸ் மரங்கள், தஹிட்டியப் பெண்கள் என்பனவாகும்.
(3) இரவு உணவகம், சிறைச்சாலை விறாந்தை என்பனவாகும்.
(4) கார்ட்ஸ் (Cards) விளையாடுவோர், நட்சத்திரங்கள் நிறைந்தவொரு இரவு என்பனவாகும்.
(5) ஆர்லஸ்சிலுள்ள பாலம், விக்டரிமலை என்பனவாகும். (.........)


**18.** ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்களையும் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட குகைகளில் காணப்படும் பிராணிகளின் உருவங்களையும் ஒப்பிடும்போது வெளிப்படையாகத் தெரியும் இயல்பு, இலங்கைக் குகைகளிலுள்ள பிராணிகளின் உருவங்கள்,
(1) அளவிற் சிறியனவாகும்.
(2) அளவிற் பெரியனவாகும்.
(3) திறந்தவெளியில் வரையப்பட்டுள்ளவையாகும்.
(4) அடிப்படை இயல்புகளைக் கொண்ட குறியீடுகளினாலானவையாகும்.
(5) இயற்கையாக வரையப்பட்டிருக்கின்றவையாகும். (.........)

**19.** 'இராகமாலிகை ஓவியம்' என்பது,
(1) இராகங்களை உருவாக்குவதற்கு சங்கீதக் கலைஞர்களுக்கு உதவியாயமைந்த ஓவிய நிர்மாணிப்புகளாகும்.
(2) இராகமயமான சங்கீதத்தை ரசித்தவண்ணம் ஓவியர்களால் வரையப்பட்ட ஓவியங்களாகும்.
(3) பாடல்களின் ரசனை வெளிப்படுமாறு ஓவியர்களால் ஆக்கப்பட்ட ஓவியங்களாகும்.
(4) பாடலொன்றின் கருத்து ரசனையும் ஓசை ரசனையும் ஒன்றிணைவதால் ஏற்படுகின்ற அனுபவத்தின் இயல்பு ஓவியமாக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) ஓவியமொன்றின் பாவத்தை ரசனையுடன் வெளிப்படுத்துவதற்காக ஆக்கப்பட்ட பாடல்களுக்கு சப்தஸ்வரங்களை இணைத்தலாகும். (.........)

**20.** பொலன்னறுவை 'தலதாமலுவ' எனப்படும் வழிபாட்டிடத்தில் காணக்கூடிய சமய சார்பான நினைவுச் சின்னங்கள்,
(1) ஏழடுக்கு மண்டபம், பத்தசீமா மண்டபம், நிஸ்ஸங்கலதா மண்டபம் என்பனவாகும்.
(2) அட்டதாகே, ஹெட்டதாகே, வட்டதாகே என்பனவாகும்.
(3) தூபாராம, லங்காதிலக்க, திவங்கசிலைமனை என்பனவாகும்.
(4) விஜயோத்பாய, நிஸ்ஸங்க மாளிகை, ராஜவேஷிபுஜங்க மண்டபம் என்பனவாகும்.
(5) ரன்கொத் வெஹெர, கிரி வெஹர, பபலு வெஹர என்பனவாகும். (.........)

[பக். 4 ஐப் பார்க்க

- **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியப் பகுதிகளிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21.** இங்கு தரப்பட்டுள்ள ஓவியங்களுள் இலங்கை கல்வித் திணைக்களத்தில் உயர் பதவிகளை வகித்த ஓவியக் கலைஞர்களின் ஓவியங்கள் எவை ?

(1) K, L (2) K, M (3) L, M (4) M, N (5) M, O (.........)

**22.** இவற்றுள் 43 ஆம் குழு கலைஞர்களின் ஓவியங்கள் யாவை ?

(1) K, L, M (2) K, L, N (3) K, N, O (4) L, M, N (5) L, N, O (.........)

**23.** இந்த ஓவியங்களுள் இலங்கை கலை நிலையக் கலைஞரொருவரின் யதார்த்தபூர்வமான நிர்மாணிப்பு யாது ?

(1) K (2) L (3) M (4) N (5) O (.........)

**24.** இவற்றுள் குறித்தவொரு கலைக் கைத்தொழிலுக்காக நிர்மாணிக்கப்பட்ட ஓவியம் எது ?

(1) K (2) L (3) M (4) N (5) O (.........)

**25.** இந்த ஓவியங்களுள் குறித்தவொரு சமய எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்ட ஓவியம் எது ?

(1) K (2) L (3) M (4) N (5) O (.........)

- **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை P, Q, R, S, T** எனப் பெயரிடப்பட்ட பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


P


Q


R


S


T

**26.** **P** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்,

(1) தலதா மாளிகையின் பெரஹெரவைச் சித்திரிக்கும், தேசிய கலாபவனக் காட்சியகத்தில் காணக்கூடியதாகும்.
(2) தலதா மாளிகையின் பெரஹரவைச் சித்திரிக்கும், தேசிய அரும்பொருள் காட்சியகத்தில் காணக்கூடியதாகும்.
(3) தேசிய கலாசாரத்தை எடுத்துக்காட்டும், மத்தள விமான நிலையத்தில் காணக்கூடியதாகும்.
(4) கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் காணக்கூடியதாயுள்ள இலங்கைக் கலைஞரொருவரின் நிர்மாணிப்பாகும்.
(5) கலைத்துவக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி வரையப்பட்ட எண்ணெய் வர்ண ஓவியமாகும். (.........)

**27.** **Q** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்,

(1) ஜெமினிரோய் தனக்கேயுரிய கலைநுட்பத்துடன் வரைந்த ஓவியமாகும்.
(2) இந்தியாவின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டும் நந்தலால் போஸ்சின் நிர்மாணிப்பாகும்.
(3) அபனீந்திரநாத் தாகூரினால் இந்தியாவின் தனித்துவம் சித்திரிக்கப்படும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(4) இந்திய இயல்புகளைச் சித்திரிக்கும் அமிர்தா ஷேர்கிலின் நிர்மாணிப்பாகும்.
(5) இந்தியாவின் நவீன கலைஞரொருவரின் கலைநுட்பம் நிறைந்த நிர்மாணிப்பாகும். (.........)

**28.** **R** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,

(1) பிக்குனி சங்கமித்தை ஸ்ரீமகாபோதியை இலங்கைக்குக் கொண்டுவரத் தயாராகின்றமையாகும்.
(2) அசோக மன்னனின் மனைவி ஸ்ரீமகாபோதியை தரிசித்தலாகும்.
(3) ஸ்ரீமகாபோதியை இலங்கைக்கு அனுப்பத் தயாராகும் அசோக மன்னனின் மனைவியாவார்.
(4) இந்தியப் பெண்ணொருவர் ஸ்ரீமகாபோதியைப் பார்வையிடலாகும்.
(5) ஸ்ரீமகாபோதி மரத்தின் கிளையொன்றைப் பொறுப்பேற்கும் அரசவம்சப் பெண்ணொருவராவார். (.........)

[பக். 5 ஐப் பார்க்க

More Past Papers at
tamilguru.lk

**29.** S எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்,
(1) மனப்பதிவுவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
(2) பிற்பட்ட மனப்பதிவுவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
(3) கனவடிவவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
(4) அருபவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும்.
(5) அதியதார்த்தவாதக் கலைஞரொருவரின் ஓவியமாகும். (.........)

**30.** T எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்,
(1) தூரிகையினால் நுண்ணிய ரேகைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஓவியமாகும்.
(2) ரசிகர்களின் ரசனையின் அளவில் ரசிக்கக்கூடிய ஓவியமாகும்.
(3) கித்தானை (கென்வசை) தரையில் விரித்து அதன்மீது செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(4) கித்தானின்மீது வர்ணத்தைப் பூசி வரையப்பட்ட ஓவியமாகும்.
(5) பார்வையாளர்களின் மனதில் ஆழமாகப் பதிந்த ஓவியமாகும். (.........)

- **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் உருவப்படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**31.** இக்கட்டட நிர்மாணிப்பு,
(1) திரியாய கிரிகண்டுசாய வட்டதாகேயாகும்.
(2) மிகிந்தலை அம்பஸ்தலவிலுள்ள வட்டதாகேயாகும்.
(3) மெதிரிகிரிய வட்டதாகேயாகும்.
(4) அனுராதபுர தூபாராமவிலுள்ள வட்டதாகேயாகும்.
(5) பொலன்னறுவை வட்டதாகேயாகும்.



(.........)

**32.** இங்கு காட்டப்பட்டுள்ள இந்துக் கோயில்,
(1) 13ஆம் நூற்றாண்டில் பாண்டிய கட்டடக்கலை இயல்புகளுக்கமைய கட்டப்பட்டதாகும்.
(2) 11ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டதாகும்.
(3) வானவன்மாதேவி என்ற அரசியால் பொலன்னறுவையில் கட்டப்பட்டதாகும்.
(4) சோழர்களின் கட்டடக்கலை இயல்புகளுக்கமைய 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.
(5) காலிங்கமாகனால் கட்டப்பட்ட இந்துக் கோயிலாகும்.



(.........)

**33.** இங்கு காட்டப்பட்டுள்ள கோயில்களின் கட்டடத்தொகுதி,
(1) மலைக்குன்றுகளை வெட்டி நிர்மாணிக்கப்பட்ட கோயில்களின் தொகுதியாகும்.
(2) மாமல்லபுரத்தில் காணப்படுகின்ற பாண்டவர் கோயில்களின் தொகுதியாகும்.
(3) மாமல்லபுரத்தில் கரையோர மலைக்குன்றின் மீது நிர்மாணிக்கப்பட்ட கோயில்களின் தொகுதியாகும்.
(4) பல்லவர்களால் மகாபலிபுரக் கடற்கரையில் கட்டப்பட்ட கோயில்களின் வரிசையாகும்.
(5) கற்குன்று ஒன்றினால் ஐந்து கோயில்கள் அமைக்கப்பட்டவொரு சந்தர்ப்பமாகும்.




(.........)

**34.** இங்கு காட்டப்பட்டுள்ள பைசாந்திய கிறிஸ்தவ தேவாலயம்
(1) பைசாந்திய கட்டடக் கலைக்கமைய ஆரம்பத்தில் நிர்மாணிக்கப்பட்ட சென்விடாலே தேவாலயமாகும்.
(2) உயர் தரமான சித்திரங்களுக்குப் பிரசித்தமான இத்தாலியின் கிறிஸ்து தேவாலயமாகும்.
(3) 'தியடோரா அரசியும் பணிப்பெண்களும்' என்ற பெறுமதிவாய்ந்த மொசைக் ஓவியத்தைக் காணக்கூடிய சென்விடாலே தேவாலயமாகும்.
(4) 'ஜஸ்டீனியப் பேரரசனும் பணியாளர்களும்' என்ற மொசைக் ஓவியம் வரையப்பட்டுள்ள இடமாகும்.
(5) ஜஸ்டீனியப் பேரரசனால் கட்டியெழுப்பப்பட்ட ஹேகியா சொபியா தேவாலயமாகும்.



(.........)


**35.** இங்கு காட்டப்பட்டுள்ள வில் வளைவு,
(1) உரோமர்கள் தமது கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டுவதற்காக மேற்கொண்ட நிர்மாணிப்பாகும்.
(2) உரோம சிற்பக்கலையின் பெருமையை எடுத்துக்காட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட வில் வளைவாகும்.
(3) உரோமப் பேரரசனொருவனின் யுத்த வெற்றிக் குறிப்புகளை உள்ளடக்கிய செதுக்கல்களைக் கொண்ட வீதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்ட வில் வளைவாகும்.
(4) உரோமாபுரியில் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்குச் செல்வதற்கான நுழைவாயிலாகக் கட்டப்பட்டதாகும்.
(5) உரோமப் பேரரசர்களால் தமது நகரங்களை அலங்கரிப்பதற்காகக் கட்டப்பட்டதாகும்.



(.........)

[பக். 6 ஐப் பார்க்க

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை** பின்வரும் சித்திரத்தினைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



**36.** களனி விகாரையில் இவ்வோவியத்தைக் காணக்கிடைப்பது,
(1) பழமையான விகாரைமனையில் ஆகும். (2) புதிய விகாரைமனையில் ஆகும்.
(3) கிடந்தநிலைச் சிலைமனையில் ஆகும். (4) பொற்சிலைமனையில் ஆகும்.
(5) பேரரசன் சிலைமனையில் ஆகும். (.........)

**37.** இவ்வோவியத்தை வரைந்த கலைஞர்,
(1) சுதேச சித்திரக்கலையின் பெருமை பாதுகாக்கப்படும் விதத்தில் நிர்மாணிப்பில் ஈடுபடும் ஒருவராவார்.
(2) சுதேச இயல்புகளைப் பாதுகாக்கும் விதத்தில் மனித உருவங்களைக் கையாளும் தேர்ச்சிகளைக் கொண்டவராவார்.
(3) சுதேச சித்திரக்கலை நுட்பங்களைத் தவிர்த்து இந்திய கலைப்பண்புகளைத் தலைமையாகக் கொண்ட ஒருவராவார்.
(4) அஜந்தா, பார்க் ஓவிய நுட்பங்களை சுதேச பண்புகளுடன் கலந்து நிர்மாணங்களை மேற்கொண்டவராவார்.
(5) நந்தலால் போஸ்சைப் பின்பற்றிய ஒருவராவார். (.........)

**38.** இந்த ஓவியத்தினால் வெளிப்படுத்தப்படுவது,
(1) கீர்த்தி ஸ்ரீ மேகவர்ண மன்னனின் கோரிக்கைக்கமைய ஹேமமாலா தந்தகுமார இளவரசன் ஆகியோர் புனித தந்ததாதுவை இரகசியமாகக் கடத்திக் கொண்டு வருகின்றமையாகும்.
(2) ஹேமமாலா தனது கணவனான தந்தகுமார இளவரசனுடன் இணைந்து புனித தந்ததாதுவை தனது குடுமியில் மறைத்துவைத்து இலங்கைக்குக் கொண்டு வருகின்றமையாகும்.
(3) சத்திரிய வம்சத்தவர்களிடமிருந்து புனித தந்ததாதுவைப் பாதுகாப்பதற்காக ஹேமமாலா, தந்தன் ஆகிய பிராமணர்களால் புனித தந்ததாது இலங்கைக்குக் கொண்டுவரப்படுகின்றமையாகும்.
(4) ஹேமமாலாவும் தந்தனும் புனித தந்ததாதுவைக் களவாடி குடுமியில் மறைத்துவைத்து இலங்கைக்குக் கொண்டு வருகின்றமையாகும்.
(5) தம்பதிவயில் வசித்த இந்து பக்தர்கள் புனித தந்ததாதுவை அழித்துவிடுவர் என்ற பயத்தினால் அதனைக் களவாடி இரகசியமாக இலங்கைக்குக் கொண்டு வருகின்றமையாகும். (.........)

**39.** இந்த ஓவியத்தின் வர்ணப் பயன்பாட்டின் விசேட தன்மை,
(1) அடிப்படை வர்ணங்களின் வகைப்படுத்தலின் மூலம் பாவ ரசத்தை வெளிப்படுத்தலாகும்.
(2) அதிகூடிய ஒளியை கருத்துடைய விதத்தில் பயன்படுத்தியுள்ள முறையாகும்.
(3) வரையறுக்கப்பட்ட வர்ணங்களின் மூலம் பல்வகைப்பட்ட சாயல்களை சிறந்த முறையில் கையாளலாகும்.
(4) அதிகளவாகப் பயன்படுத்தப்பட்ட குளிர் வர்ணங்களைச் சிறந்த முறையில் வெளிப்படுத்தலுக்குப் பயன்படுத்தியுள்ளமையாகும்.
(5) முன்னணியிலிருந்து பின்னணி வரை பரவலடையும் வர்ணங்கள் முறையாக கடும் வர்ணத்துக்கு மாறுதலாகும். (.........)

**40.** இந்த ஓவிய நிர்மாணிப்பின்போது,
(1) பாவத்தைச் சித்திரிப்பதை விட இயற்கைத் தன்மைக்குக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
(2) உரிய சூழல் சித்திரிப்பின் மூலம் பக்தி சிரத்தைக்குப் பதிலாக மறைமுக நிலைமையொன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
(3) சித்திரிக்கப்பட்டுள்ள அங்கங்கள், வர்ணங்களை ஒழுங்கான முறையில் பயன்படுத்தியதன் மூலம் சிரத்தையுடனான பக்தியைப் போன்று கம்பீரமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
(4) சமயத் தன்மையை விட வரலாற்றுத்தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.
(5) இயற்கைச் சித்திரிப்பை விட மனித உருவங்களில் கூடுதலான அக்கறை காட்டப்பட்டுள்ளது. (.........)

* *

[பக். 7 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

| | |
|---|---|
| චිත්‍ර කලාව | I |
| சித்திரக்கலை | I |
| Art | I |

51 T I

## பகுதி II

※ இப்பகுதி **மூன்று உப பகுதிகளைக்** கொண்டுள்ளது.

※ ஒவ்வொரு உப பகுதியிலிருந்தும் **ஒவ்வொரு** வினா வீதம் தெரிவுசெய்து, **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக. (தேவையான இடங்களில் பரும்படிப்படங்களைப் பயன்படுத்துதல் நன்மை தரும்.)

### உப பகுதி - அ
### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** கொழும்பு காலத்தில் பௌத்த விகாரைச் சுவரோவியக் கலை புதிய மரபுகளின் ஊடாக பல்வேறு நுட்பங்களின்பால் கவனம் செலுத்தியது.

(i) எம். சார்ளிசின் லித்தோ அச்சுப்பதித்தல் முறையிலான சித்திரங்களில் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) எம். சார்ளிசின் விகாரை சுவரோவியக் கலை தொடர்பாக சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (06 புள்ளிகள்)

(iii) பெல்லன்வில விகாரை கொழும்பு கால விகாரைகளுடன் இணைந்து கொண்ட புதிய விகாரையாகும். இங்கு வரையப்பட்டுள்ள 'யமனின் தோல்வி' என்ற ஓவியம் தொடர்பாக ஆராய்க. (10 புள்ளிகள்)

**2.** பொலன்னறுவையில் இந்து ஆட்சி நிலவிய காலத்தில் கட்டப்பட்ட கோயில்களிலிருந்து பல இந்துக் கடவுள் சிலைகள் கிடைத்துள்ளன.

(i) நடராஜர் சிலையில் வெளிப்படுத்தப்படும் குறியீடுகள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பார்வதி சிலை பற்றிச் சுருக்கமாக மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iii) இந்து சமய சிலைக்கலையில் செல்வாக்குச் செலுத்தியுள்ள பொதுப் பண்புகள், கலைநுட்பங்கள் என்பவற்றை உதாரணத்துடன் விளக்குக. (10 புள்ளிகள்)

### உப பகுதி - ஆ
### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**3.** பாரதத்தின் பிரதான சைத்திய நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு மிக முன்னேற்றகரமான பௌத்த சமய சிற்பக்கலையொன்று உருவாகியது.

(i) சாஞ்சி தோரணச் செதுக்கல்களின் தூண்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செதுக்கல்கள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பாருத் சைத்தியவின் கல்வேலி, செதுக்கல்கள் என்பன பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (06 புள்ளிகள்)

(iii) அமராவதி சைத்தியவிலிருந்து கிடைக்கப்பெறும் செதுக்கல் நிர்மாணங்களில் காணப்பட்ட மகாயான பௌத்த செல்வாக்குகள் தொடர்பாக உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**4.** பாரதத்தின் முக்கியமான பௌத்த விகாரைத் தொகுதியான அஜந்தா பௌத்த சித்திரக்கலை நிர்மாணிப்புகளில் சிறப்புற அமையப்பெற்ற கலை நிலையமாகும்.

(i) அஜந்தாவின் மகாயான குகைகளில் கிடைக்கப்பெற்ற **நான்கு** ஓவியங்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) அஜந்தா குகை நிர்மாணிப்பின்போது பயன்படுத்தப்பட்டுள்ள கட்டடக்கலை உபாயங்களைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) அஜந்தா என்பது பல்வேறு காலகட்டங்களில் முன்னேற்றமடைந்த குகைகளின் தொகுதியாகும். ஆரம்பகாலத்தில் வரையப்பட்ட ஓவியங்களுக்கும் பிற்காலத்தில் வரையப்பட்ட ஓவியங்களுக்குமிடையில் காணக்கூடிய வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

### உப பகுதி - இ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**5.** கிரேக்கக் கலைஞர்கள் மனித உருவத்தைச் சிலையாக்குவதில் சிறந்த திறமை பெற்றிருந்தனர்.

(i) கிரேக்கத்தின் புராதன கால சிலைகள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) மேன்மைக் கால சிலையொன்றைச் சுருக்கமாக மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iii) "பெண் உருவத்தின் அழகிய தன்மையையும் ஆண் உருவத்தின் வாட்டசாட்டமான தன்மையையும் பாவத்தையும் வெளிப்படுத்துவதிலும் சித்திரிப்பதிலும் ஹெலனிஸ்டிக் கலைஞர் வெற்றி பெற்றுள்ளார்." உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** மறுமலர்ச்சிக் காலம் ஐரோப்பாவில் மிகச் சிறந்த கலைஞர்கள் பலர் உருவானதொரு காலமாகும்.

(i) லியனாடோ டாவின்சியின் நிர்மாணிப்புகள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) மைக்கல் ஆஞ்சலோவின் 'இறுதித் தீர்ப்பு' என்ற ஓவியத்தின் தொனிப்பொருள், மாதிரி என்பன தொடர்பாக சுருக்கமாக விமர்சிக்குக. (06 புள்ளிகள்)

(iii) சம்பவங்களைச் சித்திரிக்கும்போது மனித உருவங்களை மனதைக் கவரும் விதத்தில் நிர்மாணிக்கும் ரபாயல் சென்சியிடம் காணப்பட்ட ஆற்றலை 'ஸ்டென்சாடெலா சிக்னச்சுரா' மண்டபத்தின் ஓவியமொன்றினூடாக விளக்குக. (10 புள்ளிகள்)

* * *

More Past Papers at
tamilguru.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

| | | | |
|---|---|---|---|
| චිත්‍ර කලාව II<br>சித்திரக்கலை II<br>Art II | 51 T II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்**

பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள்தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.

* கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
* பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
* பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
* வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.
* பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.
* பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள்தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
* நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

***

More Past Papers at
tamilguru.lk

AL/2015/51/T-III

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

51 T III

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

அறிவுறுத்தல்கள் :

※ கீழே தரப்பட்டுள்ள **அ, ஆ, இ** ஆகிய பகுதிகளிலிருந்து **ஒரு** பகுதியை மாத்திரம் தெரிவுசெய்க. அதிலிருந்து **ஒரு** தலைப்பை மாத்திரம் தெரிவுசெய்து, **வர்ணச் சித்திரம்** ஒன்றை வரைக.

※ உமது பரீட்சைச் **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த வினாவின் **இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.

※ சித்திரத்தைக் கையளிக்கும்போது அது உலர்ந்திருத்தல் அவசியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

※ விரும்பிய வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும். (நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது சிலவற்றின் கலவை)

※ தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.

## பகுதி - அ
### சித்திர ஒழுங்கமைப்பு

❒ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவுசெய்க.

**1.** மீனவப் படகுகள் நிறுத்தி வைக்கப்படுகின்ற மீனவத்துறைமுகமொன்று/குளமொன்றில் நீராடும் கிராமியப் பெண்கள்

**2.** மதிய உணவருந்தும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று/வனப்பூங்காவொன்றின் அழகினை இரசிக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று

**3.** வயல்வெளியில் வேலையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு அவர்களின் மனைவிமார் மதியவுணவு கொண்டுவந்துள்ளவொரு காட்சி

## பகுதி - ஆ
### அலங்கார ஆக்கம்

❒ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவுசெய்க.

**4.** சதுரவடிவிலான தழுவணை (cusion) உறை ஒன்றினை அலங்கரிப்பதற்கான ஆக்கபூர்வமான வடிவங்களைப் பயன்படுத்தி சமச்சீரான முழுத்தள அலங்காரமொன்றினை நிர்மாணிக்குக. சிவப்பு நிறத்தின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துக.

**5.** செவ்வக வடிவிலான கட்டடப் பாவுகை(Ceiling) ஒன்றுக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றினை மரபுரீதியான அலங்காரங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்குக.

**6.** பத்திக் முறையில் அச்சுப்பதிக்கக்கூடியவாறு இயற்கையான விடயங்களைப் பயன்படுத்தி 6" × 8" அளவுடைய சுவர் அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

More Past Papers at
tamilguru.lk

## பகுதி - இ
### கிறபிக் சித்திர நிர்மாணிப்பு

❒ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவுசெய்க.

**7.** 'எமது ஆசிரியர்' என்ற தலைப்பிலான கதைப் புத்தகமொன்றின் மேலட்டையொன்றை உருவங்கள், எழுத்துகளைக் கொண்டதாக நிர்மாணிக்குக.

**8.** பெண்களின் பாதணிகளைத் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றின் விளம்பரப்பலகை ஒன்றுக்கான அழகிய ஆக்கமொன்றினை நிர்மாணிக்குக.

**9.** தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு உறவினர்கள், நண்பர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக தேசிய தனித்துவத்தைப் பேணும் விதத்தில் வாழ்த்துமடல் ஒன்றினை நிர்மாணிக்குக.

***